முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,
**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**E.A.No.04/2025 in E.P.No.14/2017**
**in**
**O.S.No.236/2004**

குருவம்மாள் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

சண்முகம் அம்மாள் (இறப்பு) ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

1. மாரியம்மாள்
2. மாரியம்மாள்
3. ஆனைமுத்து
4. சண்முகையா
5. காளி
6. பரமசிவன்
7. குருசாமிக்கோனார்
8. வெள்ளைச்சாமி ... எதிர்மனுதாரர்கள்/ இறந்துபோன பிரதிவாதியின் வாரிசுகள்

இம்மனுவானது 29.08.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சண்முகையா அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 7, 8 எதிர்மனுதாரர்கள் பிரதான நிறைவேற்றுதல் மனுவில் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ள நிலையில், இம்மனுவிலும் தோன்றாத்தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டும், 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் இம்மனுவிற்கு No Counter petition may be allowed on terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையில், மனுதாரர் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், மனு மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.16 16:59:04 +0530

பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6, விதி 17, 18–ன்படி, இவ்வழக்கில் பிரதான மனுவை சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது சுவாதீனம் பெற வேண்டி E.P.No.14/2017 என்ற மனுவை தாக்கல் செய்து, மேற்படி மனுவும் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுவில் சுவாதீனம் எடுப்பதற்காக இந்நீதிமன்றம் உத்தரவிட்டு நீதிமன்ற அமீனா அவர்கள் சுவாதீனம் எடுக்க சென்றபோது தபசில் சொத்தில் பிரதான நிறைவேறுதல் மனுவில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/பி4 என தவறுதலாக இருப்பதாக அமீனா அவர்கள் வாரண்டை ரிட்டன் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி மனு தபசில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/4 பி என்பதாகும் என்றும், மேற்படி தவறுதல் ஒரு Clerical Error என்றும், மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், மேற்படி நம்பர் பிரதான மனுவை இம்மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்றும், இல்லாவிடில் மனுதாரர்களுக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், மேற்படி மனுவை சீர்திருத்தம் செய்வதினால் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதில்லை என்றும், மேற்படி பிரதான மனுவை சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்வதால் மனுவின் தன்மையும் மூலக்கூறுகளும் மாறுபடக்கூடியதில்லை என்றும், எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு கஷ்ட, நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்றும், ஆகையால், இவ்வழக்கில் பிரதான மனுவை சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.16 16:59:13 +0530

உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவின் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter petition may be allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **தீர்வுக்குரிய பிரச்சனை:-**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது இவ்வழக்கில் பிரதான மனுவை சீர்திருத்த விபரப்படிக்கு சீர்திருத்தம் செய்து கொள்ள அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர் தரப்பில் இம்மனுவில் இவ்வழக்கில் மனுதாரர் எதிர்மனுதாரர்கள் மீது சுவாதீனம் பெற வேண்டி E.P.No.14/2017 என்ற மனுவை தாக்கல் செய்து, மேற்படி மனுவும் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், மேற்படி மனுவில் சுவாதீனம் எடுப்பதற்காக இந்நீதிமன்றம் உத்தரவிட்டு நீதிமன்ற அமீனா அவர்கள் சுவாதீனம் எடுக்க சென்றபோது தபசில் சொத்தில் பிரதான நிறைவேறுதல் மனுவில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/பி4 என தவறுதலாக இருப்பதாக அமீனா அவர்கள் வாரண்டை ரிட்டன் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி மனு தபசில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/4பி என்பதாகும் என்றும், மேற்படி தவறுதல் ஒரு Clerical Error என்றும், மேற்படி தவறுதல் வேண்டுமென்றே ஏற்பட்ட ஒன்றல்ல என்றும், தெய்வாதீனமாக ஏற்பட்டதாகும் என்றும், மேற்படி நம்பர் பிரதான மனுவை இம்மனுவில் கண்டுள்ளவாறு சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாய் இருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) E.P.No.14/2017–ன் தபசில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/4பி என குறிப்பிடுவதற்கு பதிலாக அயன் புஞ்சை சர்வே

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.16 16:59:20 +0530

எண்.346/பி4 என தெரிவித்திருப்பது தட்டச்சு பிழையால் ஏற்பட்ட தவறுகை என்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. ஆகையால், E.P.No.14/2017–ன் தபசில் 8 வது அயிட்டத்தில் அயன் புஞ்சை சர்வே எண்.346/4 பி என்று பிரதான நிறைவேற்றுதல் மனுவை சீர்திருத்தம் செய்வதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட, நஷ்டம் ஏற்படப்போவதில்லை.

8) மேலும் இம்மனுவின் 1 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter petition may be allowed on terms என கற்றறிந்த வழக்கறிஞரால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

9) ஆகையால், இம்மனுவானது நீதியின் நலன் கருதி செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

10) **<u>இறுதியாக:–</u>**

இம்மனுவானது ரூ.200/– (ரூபாய் இருநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு நேரடியாக 19.09.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 19.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 16 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.16 16:59:28 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.09.16 16:59:35 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

மு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,
E.A.No.04/2025 in
E.P.No.14/2017
in
O.S.No.236/2004
உத்தரவு (Draft / Fair)
நாள் : 16.09.2025